# தத்துவக் கதைகள்

# தத்துவக் கதைகள்

## http://anmikam4dumbme.blogspot.in

திருமூர்த்தி வாசுதேவன்

மின்னூல் வெளியீடு : **http://FreeTamilEbooks.com**

http://anmikam4dumbme.blogspot.in/2013/06/creative-commons.html

இந்த நூலை Creative Commons Attribution-ShareAlike 3.0 Unported உரிமத்தின் அடிப்படையில் வழங்குகிறேன். இதன் மூலம்,

- இந்த உள்ளடக்கத்தை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.
- திருத்தி மேம்படுத்தலாம்.
- விற்கலாம்.
- முழுக்கட்டுரையாக இன்னொரு தளத்தில் இடலாம்.
- அச்சிட்டோ, ஒலிப்பதிவாகவோ, EPUB, PDF, MOBI போன்ற வடிவங்களிலோ பகிரலாம்

இவற்றைச் செய்ய என்னுடைய முன் ஒப்புதல் தேவையில்லை. ஆனால், அவ்வாறு பயன்படுத்தும் போது, நீங்கள் வெளியிடும் உள்ளடக்கமும் மேற்கண்ட அனைத்து உரிமங்களையும் அதனைப் பயன்படுத்துபவருக்குத் தர வேண்டும். உள்ளடக்கத்தின் மூலமாக இந்த இணையத்தளத்தின் முகவரியையும் கட்டுரையையும் குறிப்பிட வேண்டும். இணையத்தை அணுகவல்ல ஊடகமாக இருப்பின், சொடுக்கவல்ல இணைப்பு ஒன்றைத் தருவதும் வரவேற்கப்படுகிறது.
தமிழில் கட்டற்ற நூல்களை வழங்குவதற்கான முயற்சியைக் கண்ட பிறகு இதனை உடனே செய்ய வேண்டும் என்று தோன்றியது.
உங்கள் ஆக்கங்களையும் இவ்வாறு பொதுப்பயன்பாட்டுக்கு ஏற்ற உரிமத்தில் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– திருமூர்த்தி வாசுதேவன்

# Contents

- Main Body

- இந்திரன்தான் காரணம்!
- ஹாப்பி ராம நவமி!
- பைத்தியம்!
- எப்படி இருக்கணும்?
- ரெவலே ஷன்
- புத்தா!
- அன்பு...
- புனிதர்
- காலை ப்ரார்த்தனை
- புனிதம்
- கூச்சம்!
- நம்பிக்கை
- மகாத்மா காந்தி
- தவளைகள் சத்தம்
- கோரிக்கை
- இப்படித்தான் இருக்க வேண்டும்
- எனக்கு எதுக்கு?
- திட்டம்
- வேட்டை நாய்
- பணம்
- வைராக்யம்
- யக்ஷவித்தம்
- கோபம்
- திருமூர்த்தி வாசுதேவன்
- Free Tamil Ebooks - எங்களைப் பற்றி

# 1

# இந்திரன்தான் காரணம்!

ஒரு ஊரில் ஒரு ப்ராம்ஹணர் இருந்தார். கடும் உழைப்பாளி. ஒரு தோட்டம் வைத்து இருந்தார். அதில் கடுமையாக உழைத்து பல காய் கனி மரங்கள், செடிகள், பூச்செடிகள் என்று அருமையாக வைத்து இருந்தார். இந்த தோட்டமே இவர் உயிர் போல.
ஆனால் குணமோ ... சரியான கருமி! யாருக்கும் ஒரு சல்லி காசு கொடுக்கமாட்டார். தோட்டத்தில் விளைவதை விற்பாரே தவிர யாருக்கும் இலவசமாக எதையும் கொடுக்க மாட்டார்! அதனால் கிராம மக்கள் இவர் மீது அத்ருப்தி கொண்டு இருந்தனர்.
ஒரு நாள் ஒரு பசு மாடு எப்படியோ இவரது தோட்டத்தில் நுழைந்து விட்டது. அது பாட்டுக்கும் பிடித்ததை எல்லாம் சாப்பிட்டுக்கொண்டு இருந்தது. சற்று நேரத்தில் அங்கே வந்த ப்ராம்ஹணர் இதை பார்த்துவிட்டு கடும் சினத்துடன் அதை துரத்தினார். மாடு சுற்றி சுற்றி ஓடி தோட்டம் இன்னும் பாழாயிற்று. இன்னும் ஆத்திரம் அதிகமாகி ஒரு வழியாக அதை மடக்கி கழியால் அடி அடி என்றடித்ததில் மாடு இறந்து விட்டது.
ப்ராம்ஹணருக்கு அப்புறம்தான் தான் செய்த செய்கை புரிந்தது. இதற்குள் கிராம ஜனங்கள் அங்கே கூடிவிட்டனர். எல்லோரும் ஆத்திரம் தீர அவரை திட்டித்தீர்த்தனர். பின் பசுவை கொன்றதற்கு ஈடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.
இவரோ சரியான கருமி ஆயிற்றே! எப்படி இதில் இருந்த தப்பிக்கலாம் என்று பலமாக யோசனை செய்தார். ஒரு வழி தோன்றியது.
“இதோ பாருங்கள் மாட்டை நான் அடிக்கவில்லை. இந்த கைதான் அடித்தது” என்றார்.
“அப்போது அந்த கைக்கு உரியவரிடம்தானே கேட்டக் வேண்டும்?” என்றனர் மக்கள்.
“ஆமாம். கைக்கு அதி தேவதை இந்திரன்தான். அவனிடம்தான் நீங்கள் கேட்க வேண்டும்” என்றார் இவர்.
இவரோ சாஸ்திர வல்லுனர். இதை மறுத்து பேச முடியாமல் மக்கள் கலைந்து சென்றனர்.
நடந்ததை இந்திரன் கவனித்துக்கொண்டு இருந்தான். ஓஹோ அப்படியா சேதி என்று சொல்லிக்கொண்டு அன்று மாலை ஒரு கிழ ப்ராம்ஹணர் வேடம் தாங்கி கீழே இறங்கி வந்தான். தோட்டத்தின் அருகே சென்றான். ப்ராம்ஹணர் தோட்ட வேலை செய்து கொண்டு இருந்தார்.
என்ன ஓய் பார்க்கிறீர்?
இந்த தோட்டம் யாருடையது?
ஏன்? என்னுடையதுதான்.
இல்லை, இந்த தோட்டம் இவ்வளவு அழகாக இருக்கிறதே என்று ரசிக்கிறேன்!
எல்லாம் என் உழைப்பு!
இந்த பூச்செடிகளில்தான் என்ன அழகான வாசனையான பூக்கள்!
நானேதான் பார்த்து இந்த கைகளாலேயே செடி நட்டு, தண்ணீர் விட்டு, வளர்த்தேன்!
இந்த பழ மரங்கள் எல்லாம் பழுத்து குலுங்குகின்றன. மிகவும் சுவையான பழங்களாக இருக்க வேண்டும்.
ஆமாம், எல்லாமே தரமான வகை மரங்கள். பார்த்து பார்த்து நானே வாங்கி வந்து என்

கைகளாலேயே நட்டிருக்கிறேன்.
அப்போது இதெல்லாமே உங்களால்தான்!
ஆமாம் ஐயா, எல்லாம் என் உழைப்புதான். இந்த கைகால்களால் உழைத்து கிடத்த பலன்தான்!
இதற்குள் என்ன சமாசாரம் என்று கிராமத்தார் கூடிவிட்டனர்.
உரத்த குரலில் கிழவர் கேட்டார். ஓஹோ! கைகளால் உழைத்து கிடைத்ததன் பலனை நீங்கள் ஏன் அனுபவிக்கிறீர்கள்? அது உங்கள் சொல்படி இந்திரனுக்குத்தானே சேர வேண்டும்? ஏதேனும் லாபம் என்றால் அது உங்களுடையது, நஷ்டம் என்றால் இந்திரன் மீது பழியை போடுவதா?
ப்ராம்ஹணர் தலையை தொங்கபோட்டுக்கொண்டு ஊரார் விதிக்கும் தண்டனையை ஏற்கிறேன் என்றார்.

http://anmikam4dumbme.blogspot.in/2013/05/blog-post_11.html

## 2

# ஹாப்பி ராம நவமி!

சில மாதங்கள் முன் ஒரு பெரியவரிடம் கேட்ட கதை. அயோத்தி நாட்டில் ஒரு ஏழை ப்ராம்ஹணர் இருந்தார். (அந்த காலத்து கதைகள் முக்காலே மூணு வீசம் இப்படித்தான் ஆரம்பிக்கும்!) குடிசை போட்டுக்கொண்டு எளிய வாழ்க்கை. அவர் பாட்டுக்கு வேதங்கள், சாஸ்த்ரங்கள் அத்யயனம் செய்து கொண்டு, சொல்லிக்கொடுத்துக்கொண்டு இருந்தார். பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற கவலை கொஞ்சம் கூட இல்லாமல்..... தினசரி ஜீவனம் ஓடிக்கொண்டு இருந்தாலும் நாளையை பற்றிய எண்ணம் கொஞ்சம் கூட இல்லாமல்.... அவர் பொறுத்த வரை நிம்மதியாக இருந்தாலும் அவரது மனைவி நிம்மதியாக இல்லை. "இந்த ஆண்களுக்கு எங்கே இருக்கிறது பொறுப்புணர்ச்சி? இத்தனை குழந்தைகள் இருக்கின்றனவே அத்தனயும் கடை தேற வேண்டாமா? கவலையே இல்லாம இருக்கிறாரே இந்த மனுஷன்! என்ன செய்யலாம்" என்று சிந்தனை செய்து கொண்டிருந்தார்.
அப்போது ஊரில் பரப்பரப்பாக பேச்சு எழுந்தது. தசரதர் ராமனை காட்டுக்கு போகச்சொல்லி விட்டாராம். அவரும் தன் உடமை எல்லாவற்றையும் தானம் செய்து விட்டு காட்டுக்கு போகப்போகிறாராம்! பட்டாபிஷேகத்துக்கு நாள் குறித்து இருக்கும் போது இப்படி ஒரு திருப்பம்!
இந்த ஸ்திரீக்கும் 'கொக்குக்கு மீன் மீதே குறி' என்பது போல மக்கள் பேசிக்கொண்டதில் ஒன்று நன்றாக மனதில் பதிந்தது. ராமர் அவரது சொத்தை தானம் செய்துவிட்டு.... ஆஹா! நம் வறுமை நீங்க இதோ ஒரு உபாயம் கிடைத்துவிட்டது! உடனே போய் தன் கணவனின் கவனத்தை அவரது சாஸ்த்ர படனத்தில் இருந்து இழுத்தார்.
"ஓய் ப்ராம்ஹணா! நீர் பாட்டுக்கு குடும்பத்தின் கவலை ஏதும் இல்லாமல் காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிறீரே! வரிசையாக ஏழு பெண்கள் திருமணத்துக்கு நிற்பதை பாரும். கல்யாணத்தை வெறும் கையாலா செய்ய முடியும்? போய் ஏதேனும் பொருள் சம்பாதிக்கும் வழியை பாரும்! ராமர் காட்டுக்கு போகிறாராம். தன் சொத்தை எல்லாம் தானம் செய்துவிட்டு போகப்போகிறாராம். போய் கொஞ்சமாவது வாங்கிக்கொண்டு வாருங்கள்!"

ப்ராம்ஹணனுக்கோ ப்ரதிக்ரஹம் வாங்குவதில் சம்மதம் இல்லை. யாரிடம் ப்ரதி க்ரஹம் வாங்கினாலும் அவரது பாபங்களையும் சேர்த்துதானே வாங்கிக்கொள்கிறோம்? அத்தனையும் இல்லா விட்டாலும் ஒரு பகுதி பாபமாவது? அதை எப்படி தீர்ப்பது? கொடுப்பது ராமரே ஆனாலும் மனசு ஒப்ப மாட்டேன் என்கிறதே? ஆனாலும் மனைவி சொல்வதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது?
கணவனுக்கும் மனைவிக்கும் நடந்த சம்வாதத்தில் மனைவியின் கட்சியே ஜெயித்தது!

இந்த ப்ராம்ஹணரும் ராமர் இருக்கும் இடத்தை அடைந்தார். வேத ப்ராம்ஹணனாச்சே! ராமரும் வரவேற்றார். என்ன வேண்டும் என்று கேட்டார். ப்ராம்ஹணருக்கோ கேட்க நா எழவில்லை!
ராமருக்கு விஷயம் புரிந்துவிட்டது. இவரது கோலத்தை பார்த்தாலே இவரது ஏழ்மை புரிந்துவிட்டது. காசுக்கு ஆசைபடாத ப்ராம்ஹணனாக இருக்க வேண்டும். சொத்தை

தானம் செய்யும் செய்தி கேட்டு வந்திருக்க வேண்டும். ஆனால் ப்ரதிக்ரஹம் வாங்க கூச்சப்பட்டுக்கொண்டு நிற்கிறார்.
இங்கேதான் ராமரின் மேன்மை வெளிப்பட்டது. வலுக்கட்டாயமாக தானம் கொடுத்து அவரை சங்கடப்படுத்தாமல் மெதுவாக பேசலானார். “ப்ராம்ஹணரே, என் சொத்து அத்தனையும் ஏறத்தாழ தானம் செய்துவிட்டேன். என் பசுக்கள் மட்டுமே இன்னும் எஞ்சியவை. இதோ அரண்மனையின் வெளியே மேயும் கூட்டம்தான் அவை. ஒரு போட்டி வைக்கப்போகிறேன். யாரேனும் இந்த கழியை இங்கிருந்து வீசினால் அவருக்கு இங்கிருந்து அந்த கழி வீசப்படும் இடம் வரை உள்ள பசுக்களை பரிசாக அளிக்கப்போகிறேன்! முயற்சி செய்து பார்க்க விருப்பமா?”
ப்ராம்ஹணருக்கு பரம சந்தோஷமாகிவிட்டது! பெறுவது பரிசல்லவா? தானம் இல்லையே? கௌபீனத்தை இறுக்கிக்கட்டிக்கொண்டு ஓடி வந்து கழியை வீசி எறிந்தாராம். அது சரயு நதிக்கு அப்பால் போய் விழுந்ததாம்! ராமர் அவரை நமஸ்கரித்து “இங்கிருந்து கழி விழுந்த இடம் வரை உள்ள பசுக்கள் உங்களுடையது. ஓட்டிக்கொண்டு போங்கள்!” என்றாராம்!
–
பெரியவர் சொன்ன கதைக்கு கொஞ்சமே கொஞ்சம் கண், மூக்கு எல்லாம் வைத்து இருக்கிறேன்.
ஹாப்பி ராம நவமி!

http://anmikam4dumbme.blogspot.in/2013/04/blog-post_19.html

## 3

# பைத்தியம்!

சமீபத்தில், பாண்டிச்சேரியில் ஒரு ஞாயிறு அன்று நொச்சூர் வெங்கட்ராமன் அவர்களின் உபன்யாசம் கேட்கும் வாய்ப்பு கிட்டியது. ஒரு பத்து பதிவுகளுக்கு விஷயம் தேறிவிட்டது! )

கேரளாவில் ஒரு கிராமத்தில் ஒருவர் இருந்தார். ஊர் சுற்றிக்கொண்டு இருக்கும் அவரை மக்கள் பைத்தியம் என்றே அழைப்பர். ஒரு கால் நொண்டி வேறு. ஊருக்கு அருகில் ஒரு சிறு குன்று உண்டு. அதன் அடிவாரத்தில் ஒரு சிறு ஓடை. தினசரி காலை இந்த பைத்தியம் ஒரு பெரிய கல்லை கஷ்டப்பட்டு உருட்ட ஆரம்பிக்கும். தூக்க முடியாத அளவு பெரிது. அதனால் அதை உருட்டி குன்றின் மேலே ஏற்றும். ஒரு வழியாக குன்றின் உச்சியை அடையும் போது மாலை ஆகிவிட்டு இருக்கும்! உச்சியை அடைந்த பிறகு பெருத்த சத்தத்துடன் அதை கீழே உருட்டி விடுவார்! அது உருண்டு கீழே வந்து ஓடையில் பெரிய சத்தத்துடன் விழும்!

இது தினசரி நடந்து கொண்டு இருந்தது!

மக்கள் இது குறித்து அவரை கேலி செய்வர். “ஏண்டா? ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு அதை மேலே உருட்டிக்கொண்டு போகிறாய்? சரி, அதை மேலே கொண்டு வைத்தாலும் பரவாயில்லை. அங்கே கொண்டு போன பிறகு கீழே உருட்டி விடுகிறாய்! போகட்டும். ஏன் திருப்பி அடுத்த நாளும் மேலே உருட்டிக்கொண்டு போகிறாய்? நீ சரியான பைத்தியம்!” அவரோ சிரித்துக்கொண்டே இருப்பார்.

ஒரு நாள் பொறுக்க முடியாமல் அவருடைய அண்ணா கேட்டார், “ ஏன்டா இபப்டி இருக்கிறாய்? எல்லோரும் சிரிக்கிறார்கள். ஏன் இப்படி கல்லை தினசரி மேலே கொண்டுப்போய் உருட்டி விடுகிறாய்?”

பதில் வந்தது: “அது உருண்டு கீழே ஓடையில் பொத் என்று விழும் போது சிரிப்பாக இருக்கிறது”

“இந்த க்ஷண நேர இன்பத்துக்கா இப்படி செய்கிறாய்?”

“நீங்கள் மட்டும் என்ன செய்கிறீர்கள்? வாழ்வில் சிறிது நேர மகிழ்ச்சிக்கு நாள் முழுதும் பாடுபடவில்லையா?”

http://anmikam4dumbme.blogspot.in/2012/10/blog-post_18.html

**4**

# எப்படி இருக்கணும்?

அரபு ஆன்மீக பெரியவர் சாடி சொன்ன கதை.
ஒரு மனிதன் காட்டின் வழியே போய்க்கொண்டிருந்தான். அங்கே ஒதுக்குப்புறத்தில் ஒரு நரியை பார்த்தான். அதற்கு இரண்டு கால்கள் இல்லை. இது எப்படி உயிர் வாழ்கிறது என்று அதிசயித்தான்.
அப்போது இரையை வாயில் கவ்வியபடி ஒரு புலி வந்தது. மனிதன் பதுங்கிக்கொண்டான். புலி இரையை கீழே போட்டுவிட்டு வயிறார சாப்பிட்டுவிட்டு மீதியை நரிக்கு விட்டுவிட்டுப் போய்விட்டது. நரி இந்த மீதியை உண்டு பசியாறியது.

இதை பார்த்த மனிதன் “எனக்கு பெரிய உண்மை புரிந்துவிட்டது; யார் எங்கிருந்தாலும் ஆண்டவன் உணவிடுகிறான். நானும் இந்த நரி போல் சும்மா இருப்பேன். எனக்கும் உணவு கிடைக்கும்” என்று நினைத்தான்.

ஒரு மரத்தடியில் சும்மா படுத்துக்கிடக்கலானான். பசி கொடுமையால் தவித்தான். உணவேதும் கிடைக்கவில்லை. விடாப்பிடியாக சும்மாவே கிடந்தான்.

பின் பசி பொறுக்காமல், “கடவுளே, ஏன் எனக்கு உணவிடவில்லை?” என்று கத்தினான். அசரீரி கேட்டது: “முட்டாளே! ஏன் நரி போல இருக்க நினைக்கிறாய்? புலி போல இரு!”

http://anmikam4dumbme.blogspot.in/2011/11/blog-post_29.html

**5**

# ரெவலே ஷன்

ஒரு பெரிய பண்டிதர் ஆன்மீக குரு ஒருவரை தேடி வந்தார்.
“நீங்கள் நூல்களில் இல்லாத பெரிய விஷயங்களைக் கூட காட்டிக் கொடுக்கிறீர்களாமே?”
குரு புன்னகைத்தார்.
பண்டிதர் விடவில்லை.
“எனக்கு நீங்கள் கட்டாயமாக ஏதேனும் காட்டிக் கொடுக்க வேண்டும்.”
“சரி, இப்போது மழைக் காலமில்லையா? இன்று மழை வரும் போல இருக்கிறது. மழை பெய்யும் போது மைதானத்தில் சென்று கைகளை உயர தூக்கிக் கொண்டு நில். ஏதேனும் புரியலாம்.”
அடுத்த நாள் பண்டிதர் வெகு கோபமாக வந்தார்.
“என்ன ஆயிற்று?”
“நீங்கள் சொன்னது போல மழையில் நேற்று மாலை நின்றேன்.”
“ம்?”
“முழுக்க நனைந்து போனேன். எல்லாரும் சிரித்தார்கள். நான் என்னை ஒரு பெரிய முட்டாளாக உணர்ந்தேன்!”
“பரவாயில்லையே? முதல் நாளே பெரிய விஷயம் புரிந்துவிட்டதே!”

http://anmikam4dumbme.blogspot.in/2011/11/blog-post_16.html

## 6

# புத்தா!

அந்த ஹிமாலய துறவி கண்ணை திறந்த போது புத்த மட தலைமைத்துறவி அவருக்காக காத்திருப்பதை கண்டார்.
வாருங்கள், உங்களுக்கு நான் என்ன செய்யகூடும்?
பெரிய பிரச்சினை. எங்கள் மடாலயம் ஒரு காலத்தில் மேற்கத்திய நாடுகளில் கூட பிரபலமாக இருந்தது. எல்லா அறைகளும் நிறைந்து இருந்தன. எப்போதும் துறவிகளின் மந்திரங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.. இப்போதோ அந்த இடம் வெறிச்சோடுகிறது. புதிதாக யாரும் வருவதில்லை. இருப்பவர்களும் உம் என்று இருக்கிறார்கள்; மெதுவாக கழட்டிக்கொள்கிறார்கள். என்ன பாபம் செய்தோம், இப்படி ஒரு நிலை வர?

துறவி சொன்னார், அறியாமை என்ற பாபமே!

என்ன அறியாமை? உங்களில் ஒரு புத்தா மறைந்து இருக்கிறார். சாதாரண ஆசாமி போல வே ஷம் போட்டு இருக்கிறார். அவரை நீங்கள் யாரும் அறியவில்லை.

அவர் யார் சுவாமி?
அதற்குள் துறவி மீண்டும் த்யானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

குழப்பத்துடனேயே புத்த மடத்துறவி திரும்பினார். திரும்பும் வழி எல்லாம் ஒரே சிந்தனை! நம் மடத்தில் புத்தாவா? யாராக இருக்கும்? அவரா? இவரா? ஒன்றும் முடிவுக்கு வர முடியவில்லை. அவரிடம் இந்த குற்றம் இருக்கிறது, இவரிடம் அந்த குற்றம் இருக்கிறது. ஆனால் சாதாரண ஆசாமி போல வே ஷமென்றல்லவா சொல்லிவிட்டார்? குற்றமும் ஒரு வே ஷமாக இருக்கலாமே?

மடாலயம் முழுதும் இந்த விஷயம் கசிந்துவிட்டது. எல்லோருமே யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவரா, இவரா? ஒரு விஷயம் நிச்சயம். புத்தர் வே ஷம் போட்டு இருப்பதால் நிச்சயம் அவரை கண்டுபிடிக்க முடியாது.

அன்றிலிருந்து ஒருவரை ஒருவர் பார்க்கும் பார்வையே மாறிப்போனது! இவர் புத்தாவாக இருக்கலாமே! மற்றவர்களிடம் மரியாதை, அன்பு, கரிசனத்துடன் நடந்து கொள்ள ஆரம்பித்தனர். சீக்கிரமே அந்த இடம் மாறிப்போனது. அன்பு பெருகிய அந்த இடத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. புதியதாக பல இளந்துறவிகள் சேர ஆரம்பித்தனர். மடாலயத்தின் பழைய பெருமை மீண்டும் ஓங்கியது!

http://anmikam4dumbme.blogspot.in/2011/11/blog-post_14.html

**7**

# அன்பு...

முன் ஒரு காலத்தில் ஒரு சிறுமி ஒரு நோயால் இறந்து கொண்டு இருந்தாள். மருந்துகள் மாத்திரைகள் என்று பிரபலமாகாத காலம். வைத்தியர் என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அவளது சகோதரன் கொஞ்ச நாள் முன்தான் இதே நோய் தாக்கி பிழைத்து இருந்தான். அப்போது அவன் ரத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தி இருக்க வேண்டும்.

டாக்டர் பையனை கேட்டார். “உன் சகோதரி பிழைக்க வேண்டுமானால் உன் ரத்தத்தை அவளுக்கு கொடுக்க வேண்டும். சம்மதமா? ”

பையனுக்கு தூக்கி வாரி போட்டது. பயந்து போனான். அரை நிமிடம் சென்றபின் “சரி, எடுத்துக்கொள்ளுங்கள்” என்றான்.
தேவையான அளவு மட்டும் ரத்தம் எடுக்கப்பட்டு சிறுமிக்கு செலுத்தப்பட்டது. ஒரு மணி சென்றது. சிறுமி நிலையில் கொஞ்சம் முன்னேற்றம் தெரிந்தது. இனி பிழைத்துவிடுவாள் என்றார் வைத்தியர்.

சிறுவன் சிறிது தயங்கிவிட்டு கேட்டான். நல்லது டாக்டர், நான் எப்போது செத்து போவேன்? அப்போதுதான் டாக்டருக்கு புரிந்தது. சிறுவன் தன் ரத்தத்தை கொடுப்பதால் தன் உயிரையே கொடுப்பதாக நினைத்தான் என்று!

http://anmikam4dumbme.blogspot.in/2011/09/blog-post_28.html

# 8

## புனிதர்

தேவர்களும் பார்த்து மகிழக்கூடிய புனிதர் ஒருவர் இருந்தார். அவர் புனிதர் என்பதே அவருக்கு தெரியவில்லை. அவரது வேலைகளை அலட்டிக்கொள்ளமல் செய்து வந்தார். ஒரு தெருவிளக்கு எரிந்து தன் கடமையை செய்வது போல... தான் செய்வதாக நினைக்காமல் மலர்கள் தம் வாசனையை பரப்புவது போல..

அவர் யாரை பார்த்தாலும் அவரை உள்ளபடி பார்ப்பார். "இவர்களது காமும் குரோதமுமே இவர்களை பிடித்து ஆட்டிகிறது. பாவம்!" இதனால் அவர் எல்லோரிடமும் அன்பு செலுத்தினார். அவரது பார்வை வித்தியாசமாக இருப்பதாக அவருக்கு தெரியவே தெரியாது!

கடவுளிடம் இருந்து ஒரு தேவதை வந்தது. என்னை கடவுள் அனுப்பினார். நீ ரொம்பவும் நல்லவனாக இருக்கிறாய். ஏதாவது வரம் வாங்கிக்கொள்!
ஒரு வரமும் வேண்டாம் என்றார் புனிதர்.
"ஏதாவது வாங்கிக்கொள்ள வேண்டுமே! இல்லாவிட்டால் கடவுள் கொடுத்த வேலையில் இருந்து நான் தவறிவிடுவேனே! எல்லா நோயையும் குணமாக்கும் சக்தி கொடுக்கட்டுமா?"
"வேண்டாம். அதை கடவுளே செய்து கொள்ளட்டும்!"
"பாபம் செய்வோரை நல்வழி திருப்பும் சக்தி?"
"வேண்டாம், அதை தேவர்கள் பார்த்துக்கொள்ளட்டும்!"
"உன்னை எல்லோரும் ஒரு ஆதர்ச மனிதனாக பார்த்து அதைபோல நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்க வைக்கும் சக்தி?"
"வேண்டவே வேண்டாம். அப்புறம் எல்லோரும் என்னை சூழ்ந்து கொள்ள ஆரம்பித்துவிடுவர்!"
"பின்னே என்னதான் கொடுக்கட்டும். ஏதாவது கேட்டு வாங்கிக்கொண்டு என்னை காப்பாற்று!"
"ம்ம்ம்ம்ம்... சரி, என் நிழல் என் பின்னால் விழும்போது எதன் மீது விழுகிறதோ அந்த இடத்தில் உள்ள தோஷங்கள் அகல வேண்டும்."

அன்றிலிருந்து புனிதரின் நிழல் பின்னால் விழுந்த இடத்தில் இருந்தவர் நோய்கள் நீங்கின. நிலம் செழுமையானது. தாவரங்கள் நன்கு வளர்ந்தன.

எல்லோரும் புனிதரைவிட்டு அவரது நிழலையே பார்த்துக்கொண்டு இருந்ததால் அவருக்கும் ஒரு பிரச்சினையும் வரவில்லை.

http://anmikam4dumbme.blogspot.in/2011/05/blog-post_20.html

**9**

## காலை ப்ரார்த்தனை

ஐசாக் ஆப் ஜெர் ஒரு யூத ராபி.
ஒரு நாள் ஒரு சக்கிலி அவரிடம் வந்தான்.
" ஐயா என் காலை ப்ரார்த்தனைகள் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும்."
"என்ன பிரச்சினை அப்பா?"
என் தொழில் ஏழை தொழிலாளர் சம்பந்தப்பட்டது. தினசரி இரவு என் இடத்துக்கு வரிசையாக பல தொழிலாளர்கள் வருவர். அவர்களுக்கு இருப்பதோ ஒரே ஒரு ஜோடி காலணிகள். அவற்றை பழுது நீக்கி கொடுத்தால்தான் அவர்கள் அடுத்த நாள் வேலைக்கு போக முடியும். ஏறக்குறைய இரவு முழுவதும் வேலை செய்கிறேன். பல நாட்கள் காலையில் அவர்கள் வரும் வரைக் கூட வேலை நிறைவு பெறாமல் இருக்கிறது. என் காலை ப்ரார்த்தனையை என்ன செய்வது?"
"இது வரை என்ன செய்தாய்?"
"சில சமயம் அவசர அவசரமாக ப்ரார்த்தனையை முடித்துவிட்டு வேலையை தொடருவேன். ஆனால் அப்புறம் இப்படி செய்துவிடோமே என்று வருந்துவேன். சில நாட்கள் ப்ரார்த்தனையை விட்டுவிட்டு வேலை செய்வேன். ஆனால் அப்படி வேலை செய்யும்போது என் இதயம் இபப்டிச் சொல்லி பெருமூச்சுவிடும்: நான் எவ்வளவு துரத்ருஷ்டசாலி! காலை ப்ரார்த்தனையை கூட செய்ய முடியவில்லையே!"
ராபி சொன்னார்: " நான் கடவுளாக இருந்தால் ப்ரார்த்தனையை விட இந்த பெருமூச்சை பெரிதும் மதிப்பேன்"

*anmikam4dumbme.blogspot.com/2011/05/blog-post_18.html*

**10**

# புனிதம்

சிலர் பிறக்கும் போதே புனிதமாக பிறக்கிறார்கள்.
சிலர் புனிதத்தை அடைகிறார்கள்.
சிலர் மீது புனிதம் திணிக்கப்படுகின்றது.

ஒரு எண்ணைக்கிணறு தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. மிகப்பெரிய தீயாக இருந்ததால் அதன்கிட்டே கூட யாரும் போக முடியவில்லை. கம்பெனியின் தீ அணைப்பு படையால் அதற்கு 200 அடி கிட்டே கூட நெருங்க முடியவில்லை. என்ன செய்வது என்று புரியாமல் உள்ளூர் தீயணைப்புப்படைக்கு தகவல் சொன்னார்கள். கொஞ்ச நேரத்தில் ஒரு பழங்கால வண்டி தட்டுத்தடுமாறிக்கொண்டு பாதையில் ஓடி தீக்கு 50 அடி தூரத்தில் நின்றது. அதில் இருந்து குதித்தவர்கள் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை அடித்துக்கொண்டு பின் தீ மீது தண்ணீர் அடித்து அதை அணைத்தார்கள். கம்பெனி ஆசாமிகளுக்கு ஒரே ஆச்சரியம். இவ்வளவு வீரமா?!
சில நாட்கள் கழித்து கம்பெனி ஒரு பாராட்டு விழா நடத்தியது. வீரர்களின் துணிச்சல், கடமை உணர்வு எல்லாம் வானளாவ புகழப்பட்டது. கடைசியில் ஒரு பெரும் தொகைக்கு காசோலை கொடுத்தார்கள்.

விழா முடிந்ததும் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்: அந்த பணத்தை என்ன செய்யப்போகிறீர்கள்?
உள்ளூர் தலைவர் சொன்னார்: “முதலில் அந்த வண்டியின் பாழாப்போன ப்ரேக்கை பழுது பார்க்கணும்!”

http://anmikam4dumbme.blogspot.in/2011/05/blog-post_16.html

## 11

## கூச்சம்!

வயதான புகழ் பெற்ற ராபி.
சாகக்கிடந்தார்.
அவரது சீடர்கள் அவரைச்சுற்றி குழுமி இருந்தார்கள். அவரது மகத்தான குணங்களைப்பற்றி புகழ்ந்தார்கள்!
“சாலமனுக்கு அப்புறம் இவரைப்போல புத்திசாலி பிறக்கலை!” என்றார் ஒருவர்!
“அப்புறம் அவரோட நம்பிக்கை. ஆப்ரஹாம் க்கு சமம்!” – இன்னொருவர்!
“நிச்சயமா அவரோட பொறுமை ஜாப் மாதிரி!”
“இவரைப்போல மோசஸ்க்கு மட்டும்தான் கடவுள்கிட்ட நெருங்கி பேசற அளவு உறவு!”

ராபி காதில எல்லாம் விழுந்தது! இருந்தாலும் அவர் நெளிந்து கொண்டு இருந்தார்.
சீடர்கள் போனதும் ராபியின் மனைவி கேட்டார்.
“எல்லாரும் புகழ்ந்ததை கேட்டீங்க இல்லை?”
“ம்!”
“பின்னே ஏன் நெளிஞ்சு கொண்டு இருந்தீங்க?”

“என் அடக்கமான சுபாவம்- அதைப்பத்தி யாரும் பேசலை!”

http://anmikam4dumbme.blogspot.in/2012/10/blog-post_6.html

## 12

# நம்பிக்கை

விமானம் கும்மிருட்டில் புயலில் மாட்டிக்கொண்டது.
“கடவுளே காப்பாத்து!” என்று அலறினான்.
“வெளியே குதித்துவிடு!” என்று குரல் கேட்டது.
குதித்தான்.
“கடவுளே காப்பாத்து!” என்று அலறினான்.
“பாராசூட்டை திற!” என்று குரல் கேட்டது.
திறக்க கயிறை பிடித்து இழுத்தான்.
பாராசூட் திறக்கவில்லை.
“கடவுளே காப்பாத்து!” என்று அலறினான்.
பாராசூட் எதிலோ மாட்டிக்கொண்டு நின்றது. இருட்டில் தரை தெரியவில்லை. மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. குளிர் வாட்டியது.
“கடவுளே காப்பாத்து!” என்று அலறினான்.
“பாராசூட்டை அறுத்து விடு!” என்று குரல் கேட்டது.
அவன் அறுக்கவில்லை. இரவு முழுதும் அப்படியே ஊசலாடிக்கொண்டு இருந்தான்.
காலையில் மக்கள் அவனது உயிரற்ற, விறைத்த உடலை கண்டு பிடித்தனர்- பூமிக்கு மூன்று அடி உயரத்தில்.

http://anmikam4dumbme.blogspot.in/2011/07/blog-post_3779.html

**13**

# மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்த போது பைபிளால் ஈர்க்கப்பட்டார். குறிப்பாக மலைப்பிரசங்கம் அவருக்கு மிகவும் பிடித்து இருந்தது. இந்தியாவின் ஜாதி பிரச்சினைகளுக்கு கிறிஸ்துவம் தீர்வாக இருக்கும் என்று நினைத்தார். கிறிஸ்துவர் ஆகிவிடலாமா என்று தீவிரமாக யோசித்து ஒரு நாள் சர்ச்சுக்கு மாஸ் நேரத்துக்குப்போனார். அதில் பங்கேற்று விட்டு தான் கிறிஸ்துவனாக மாற நடவடிக்கை எடுக்குமாறு கேட்க உத்தேசம்.
சர்ச் வாசலிலேயே நிறுத்தப்பட்டார். மாஸ் இல் பங்கேற்க விரும்பினால் கருப்பர்களுக்கான சர்ச்சுக்கு போகலாம் என்று மென்மையாக அறிவுறுத்தப்பட்டார்.

அப்போது திரும்பியவர் பின்னர் சர்ச் ஐ திரும்பிக்கூட பார்க்கவில்லை.

http://anmikam4dumbme.blogspot.in/2011/07/blog-post_15.html

## 14

# தவளைகள் சத்தம்

மஹா பெரியவர் அவருடைய இளமைக்காலங்களில் தமிழ்நாடு முழுதும சுற்றுப்பயணம் செய்தார்.அந்த காலத்தில் பொழுது சாய்ந்தால் கிராமம் உறங்கி விடும். ஸ்வாமிகள் மேனா எனப்படும் பல்லக்கு மாதிரியான ஒரு கூண்டில் பயணம் செய்வார். அதிலேயே படுத்து உறங்கலாம். கிராம மக்களை தொந்திரவு செய்ய விரும்பாமல் அவ்வவ்போது இரவு முகாம் என்று ஒரு வழியில் உள்ள கிராமத்தில் ஏதோ ஒரு திண்ணையில்/ மரத்தடியில் மேனாவை இறக்கி விட்டு கூட வருவோர் ஒவ்வொரு திண்ணையை தேடி போய் விடுவார்கள்.

இது போல் ஒரு மழைக்காலத்தில் ஒரு கிராமத்தில் தங்கினர். மழை பெய்து ஓய்ந்து இருந்ததால் தவளைகள் உற்சாகத்துடன் இரவு முழுதும் ஓசை எழுப்பி கொண்டிருந்தன. பரிவாரத்தில் யாருக்கும் தூக்கம் வரவில்லை!

காலை எழுந்த பிறகு ஸ்வாமிகளை மற்றவர் கேட்டார்கள்: இரவு தூங்கிணீர்களா?
ஆஹா! இரவு முழுதும் சிவா த்யானத்திலேயே கழிந்தது!
இரவு முழுதும் தவளைகள் சத்தம் போட்டுக்கொண்டே இருந்தனவே?
ஆமாம்! அவை ஹர ஹர, ஹர ஹர என்றே சொல்லிக்கொண்டிருந்தன. அதனால் சிவ த்யானமே இரவு முழுதும்!

http://anmikam4dumbme.blogspot.in/2011/07/blog-post_04.html

**15**

# கோரிக்கை

அயர்லாந்தில் பெல்பாஸ்டில் மூன்று பேர்களுக்கிடையே காரசார ஆன்மீக விவாதம். ஒருவர் கத்தோலிக்க பாதிரி; ஒருவர் ப்ராடெஸ்டென்ட் மினிஸ்டர்; மூன்றாவது ஒரு யூத ராபி. கிட்டத்தட்ட அடி தடியில் இறங்கும் நிலமை.
திடீரென்று அவர்களிடையே ஒரு தேவதை தோன்றியது, "உங்களுக்கு நன்மை உண்டாகட்டும். நாட்டில் அமைதி நிலவ ஆளுக்கொரு வரம் கேளுங்கள். ஆண்டவன் அதை கொடுப்பார்."
கத்தோலிக்கர் சொன்னார் , "எங்கள் அழகிய அயர்லாந்தில் இருந்து எல்லா ப்ராடெஸ்டென்ட்களும் காணாமல் போகட்டும். அப்போது அமைதி நிலவும்."
கோபமான ப்ராடெஸ்டென்ட் முழங்கினார், "எங்கள் புனித அயர்லாந்தில் இருந்து எல்லா கத்தோலிக்கர்களும் வெளியேறட்டும். அப்போது அமைதி திரும்பும்."

"உங்களுக்கு?" என்று ராபியை பார்த்து கேட்டது தேவதை.
"எனக்கு ஒன்றும் வேண்டாம். இவங்களோட கோரிக்கைகளை நிறைவேத்துங்க. அது போதும்."

http://anmikam4dumbme.blogspot.in/2011/06/blog-post_21.html

## 16

# இப்படித்தான் இருக்க வேண்டும்

ஒருவன் ஒரு மாஸ்டரைத்தேடி சென்று கொண்டு இருந்தான். இதைப்பார்த்த சாத்தான் எப்படியாவது அவனை மனமாற்றம் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டான்.

பொன், பொருள், புகழ் என்ன ஆசை காட்டியும் ஆசாமி அசைந்து கொடுக்கவில்லை. மனத்திண்மை அவ்வளவு இருந்தது. தோல்வியை ஒப்புக்கொண்ட சாத்தான் என்னதான் நடக்கிறது என்று காண அவனை பின் தொடர்ந்தான்.

அவன் குரு முன்னிலையில் போய் சேர்ந்தான். என்ன இது? பெரிசா சிம்மாசனம் போட்டுக்கொண்டு நிறைய பக்தர்கள் காலடியில.... ம்ம்ம்.. அடக்கம் போறலை. ம்ம்ம்ம்ம் என்னைக்கண்டுக்கக்கூட இல்லை..... உண்மையான ஆன்மீக தாகம் இருக்கிற நபரை அடையாளம் காணக்கூட தெரியலை...... நான் மத்தவங்களைப்போல அவரை போற்றி புகழலைன்னு உதாசீனம் செய்யராரோ..... இவருக்கு பட்டு பீதாம்பரம் வேற எதுக்கு?... அப்புறம் அந்த பேச்சில ஒரு அலட்சியம்.... ம்ஹூம் இவர் உண்மையான குரு இல்லை. வேறு இடம் பார்க்கலாம் என்று அவன் வெளியே சென்றான்.
மாஸ்டர் அறையின் மூலையில் இருந்த சாத்தானைப்பார்த்து சொன்னார், “ நீ கலங்கி இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அவன் ஆரம்பத்தில் இருந்து உன்னவன்தான்!”

கடவுள் இப்படித்தான் இருப்பார், இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தவர்கள் கதியும் இதுதான்!

http://anmikam4dumbme.blogspot.in/2011/06/blog-post_09.html

**17**

# எனக்கு எதுக்கு?

இரண்டு சகோதரர்கள். ஒருவருக்கு திருமணம் ஆகி ஐந்து குழந்தைகள். இருவருக்கும் பொதுவான நிலம் இருந்தது. இருவரும் அதில் கடுமையாக உழைத்தனர். நல்ல வளமான நிலம். நல்ல மகசூல் கிடைத்தது. இருவரும் சமமாக பங்கிட்டு கொண்டனர். சில வருடங்கள் சென்றன. திருமணமான அண்ணன் இரவுகளில் அவ்வப்போது எழுந்து யோசிப்பான். ‘எனக்கோ ஐந்து குழந்தைகள். எனக்கு வயதானால் யாரேனும் காப்பாற்றுவார்கள். தம்பி பாவம் திருமணம் செய்து கொள்ளாமலே இருக்கிறான். இவனுக்கு வயதானால் யார் கவனித்து கொள்வார்கள். அவனுக்கு அதிகமாக பொருள் சேர வேண்டும்.’ உடனே யாருக்கும் தெரியாமல் தன் குதிரில் இருந்து ஒரு மூட்டை தானியத்தை எடுத்து தன் தம்பியின் குதிரில் சேர்த்துவிடுவான்.

தம்பி இரவுகளில் அவ்வப்போது எழுந்து யோசிப்பான். ‘பாவம் அண்ணன். ஐந்து குழந்தைகள் பெற்றுக்கொண்டு கஷ்டப்படுகிறான். நாமோ ஒண்டிக்கட்டை. நமக்கு எதற்கு இவ்வளவு பொருள்? அவனுக்கு தேவை அதிகம்.’ உடனே யாருக்கும் தெரியாமல் தன் குதிரில் இருந்து ஒரு மூட்டை தானியத்தை எடுத்து தன் அண்ணனின் குதிரில் சேர்த்துவிடுவான்.

ஒரு நாள் இரவு இருவரும் கையில் தானிய மூட்டையுடன் ஒருவருக்கொருவர் எதிரில் மோதிக்கொண்டார்கள்!

இருவரும் இறந்து போன பிறகு இந்தக்கதை மெதுவாக வெளியே வந்துவிட்டது. பல ஆண்டுகள் சென்ற பின் ஊர் மக்கள் இறந்து போன இந்த சகோதரர்களுக்கு ஒரு நினைவுச்சின்னம் கட்ட முடிவு செய்தனர். எங்கு கட்டுவது என்று ஆலோசித்தவர்கள் இரவில் இருவரும் சந்தித்த இடத்தில் கட்ட முடிவு செய்தனர். அதைவிட புனிதமான இடமில்லை என்பது அவர்கள் கருத்து!

http://anmikam4dumbme.blogspot.in/2011/06/blog-post_06.html

**18**

# திட்டம்

டெட்சுஜன் ஒரு ஜென் மாணவர். அவருக்கு ஒரு விசித்ர ஆசை ஏற்பட்டது. சீன மொழியில் இருந்த சூத்திரங்கள் அடங்கிய ஏழாயிரம் சுவடிகளை ஜப்பானிய மொழியில் பதிப்பிக்க வேண்டும். இதற்காக அவர் ஜப்பானின் குறுக்கும் நெடுக்கும் அலைந்தார். சில தனவான்கள் நூறு பொற்காசுகள் வரை கொடுத்தனர். பல ஏழைகளும் குடியானவர்களும் சிறு காசுகள் கொடுத்தனர். ஒரு வழியாக தேவையான பொருள் சேர்ந்துவிட்டது. அந்த சமயத்தில் யூஜி ஆறு பெருக்கெடுத்து வெள்ளத்தில் பல ஊர்கள் அழிந்தன. பலர் உணவு உறைவிடம் இல்லாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டது. தன் பெரு மதிப்பு வாய்ந்த திட்டத்துக்கு சேர்த்த பொருள் அனைத்தையும் தயங்காமல் அவதி படும் மக்களுக்கு செலவழித்தார் டெட்சுஜன்.

பிறகு மீண்டும் அதே திட்டத்துக்கு பொருள் சேமிக்க துவங்கினார். பல வருடங்கள் கழித்து தெவையான பொருள் சேர்ந்த போது நாட்டில் கொள்ளை நோய் தோன்றி பல குடும்பங்களை துயரில் ஆழ்த்தியது. தயங்காமல் மீண்டும் நோய் நிவாரணத்துக்கு பொருளை செலவிட்டார்.

மூன்றாம் முறை முயற்சித்து இருபது வருடங்கள் கழித்து மீண்டும் பொருள் சேர்த்து தன் கனவான திட்டத்தை நிறைவேற்றினார்.
க்யோட்டோவில் ஒபாகு மடாலயத்தில் முதல் புத்தகத்தை அச்சடித்த பலகை இன்னும் இருக்கிறது. ஜப்பானியர் தம் குழந்தைகளுக்கு இதை கதையாக சொல்லுகிறார்கள்: டெட்சுஜன் மூன்று சூத்திர பதிப்புக்களை வெளியிட்டார், முதல் இரண்டும் கண்ணுக்கு தெரியாதவை. அவை மூன்றாம் பதிப்பைவிட மகத்துவம் வாய்ந்தவை!

http://anmikam4dumbme.blogspot.in/2011/06/blog-post_03.html

**19**

# வேட்டை நாய்

ஒருவன் புதிதாக வேட்டை நாய் வாங்கினான். அடுத்தநாள் அதை அழைத்துக்கொண்டு வாத்து (கீஸ்) வேட்டையாட போனான். முதலில் அவன் சுட்ட பறவை ஏரி நீரில் விழுந்தது. நாய் சாவதானமாக நீர் மீது நடந்துபோய் வாத்தை கொண்டு வந்தது. அவனால் அதை நம்பவே முடியவில்லை. அடுத்து ஒரு வாத்தை சுட்டான்; அதுவும் ஏரியில் விழ மீண்டும் நாய் நீர் மீது நடந்து போய் வாத்தை கொண்டு வந்தது.

வெகு ஆச்சரியத்தோடு வீடு திரும்பினான். இதை சொன்னால் யார் நம்புவார்கள்? அடுத்த நாள் பக்கத்து வீட்டுக்காரரை கூட அழைத்துப்போனான். அன்றும் வாத்துகளை இருவரும் மாற்றி மாற்றி சுட சுட, நாய் நீர் மீது நடந்து போய் வாத்துகளை கொண்டு வந்தது.

அண்டை வீட்டுக்காரர் முகத்தில் சலனம் ஒன்றுமே காணவில்லை!

“ஏதேனும் வித்தியாசமா பாத்தீங்களா?”

“ம்ம்ம் …. ஒண்ணுமே இல்லையே!”

ஒரு நிமிடம் கழித்து “ஆமாம், ஒரே ஒரு விஷயம் வித்தியாசமா இருக்கு!”

“என்ன அது?”

“நாய்க்கு நீந்த தெரியலை!”

அதிசயங்கள் நடக்கவில்லை என்று இல்லை: அவை எப்போதும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. ஏன், வாழ்கையே அதிசயம்தான். நாம் கிடைத்ததை சாவதானமாக எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் அதை உடனே உணரலாம்!

http://anmikam4dumbme.blogspot.in/2011/06/blog-post.html

## 20

# பணம்

ஒரு முதிய துறவி தனியாக சாலை வழியே சென்று கொண்டு இருந்தார். காட்டுவழியாக வெகு தூரம் சென்று ஒரு பெரும் நதியை படகில் கடந்து அடுத்த ஊர் செல்ல வேண்டும்.

வழியில் ஒரு இளம் துறவி வந்து சேர்ந்தார்.
“நீங்கள் எங்கே போகிறீர்கள்?” என்றார் இளம் துறவி.
“அடுத்த ஊருக்கு…”
“ஓ, காட்டு வழியாக செல்ல வேண்டும். நானும் கூட வரலாமா? பேச்சுத்துணையாக இருக்கும்!”
” தாராளமாக.…”

வழி நெடுக தர்ம விசாரம் – குறிப்பாக சந்நியாஸ நிலையின் கட்டுப்பாடுகளை- பேசிக்கொண்டு நடந்தனர். இளம் துறவி பல விஷயங்களை விவாதித்தார்.
கடைசியில் சந்நியாசி பணம் வைத்துக்கொள்ளலாமா கூடாதா என்று விசாரம் நடந்தது. கூடாது என்பது பெரியவரின் கொள்கை. அவசரத்துக்காக சிறிதளவு வைத்துக்கொண்டால் தப்பில்லை என்பது இளையவரின் வாதம்.
“சந்நியாசி பணத்தை கையால் தொடுவது கூட பிரச்சினை உண்டு பண்ணலாம்; பணம் வைத்துக்கொள்ளாவிட்டால் எல்லாம் பகவான் பார்த்துக்கொள்வான்” என்றார் பெரியவர்.

இந்த நேரத்தில் காட்டு வழியின் எல்லை வந்துவிட்டது. இருட்டும் நேரமும் ஆகிவிட்டது.
ஆற்றை கடக்க இலவச படகு சேவையின் கடைசி படகு போய்விட்டது.
இரவு நேரம் வந்தால் மிருகங்களின் நடமாட்டமும் அவற்றால் தொந்திரவும் இருக்கும் என்பதால் நதியை அவசியம் கடக்க வேண்டிய சூழ்நிலை என்று இளம் துறவி கருதினார். அங்கும் இங்கும் தேடி ஒரு படகோட்டியை கண்டு பிடித்தார். பணம் தருவதாக சொன்னதும் அவனும் ஆற்றை கடக்க படகு ஓட்ட சம்மதித்தான்.

ஆற்றை கடந்தபின் இளம் துறவி தன்னிடமிருந்த சிறு பண முடிப்பை திறந்து அவனுக்கு பணம் கொடுத்தார்.
பின்னர் ஊரை நோக்கி செல்ல ஆரம்பித்தனர், இளம் துறவி சொன்னார். “பார்த்தீர்களா? நான் சொன்ன படியே ஆயிற்று. என்னிடம் கொஞ்சம் பணம் இருந்ததால்தானே இப்போது நாம் ஆற்றை கடக்க முடிந்தது? நான் கூட வரவில்லையானால் நீங்கள் என்ன செய்து இருப்பீர்கள்?”

பெரியவர் சிரித்துக்கொண்டே சொன்னார்: “அப்பா, நான் தனியாகத்தானே புறப்பட்டேன்? வழியில் நீயாக வந்து சேர்ந்து கொண்டாய். பணம் இல்லாத சந்நியாசிக்கு பணம் வைத்து இருப்பவர் வந்து உதவ வேண்டும் என்பது இறைவன் விருப்பம்

போலிருக்கிறது!”

இளம் துறவி வாயடைத்துப்போனார்.

http://anmikam4dumbme.blogspot.in/2011/05/blog-post_04.html

## 21

# வைராக்யம்

ஒரு காட்டில துறவி ஒத்தர் ஒரு சின்னக் குடிசையைப் போட்டுக்கொண்டு துறவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்தார். தலை நகரத்துலேந்து வெகு தூரம் வேட்டையாட வந்த ராஜா இவரைப் பார்த்தான். அவரை அணுகி வணங்கி உபதேசம் செய்யக்கேட்டான். ராஜாவாச்சே! சரின்னு துறவியும் பல விஷயங்கள் பத்தி பேசினார். ராஜாவுக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு.

அடிக்கடி வந்து உபதேசம் கேட்டான். ராஜ்யம் நடத்துகிற விஷயம் மட்டும் இல்லாம அத்வைதமும் விசாரணை விஷயமாச்சு. இப்படியே போய்கிட்டு இருக்கிறப்ப மந்திரிகள் முதலானவர்கள் ஆக்ஷேபணை தெரிவிச்சாங்க. நீங்க பாட்டுக்கு நாள் கணக்கா காட்டுக்குப் போயிட்டா எப்படி நிர்வாகம் நடக்கிறது ன்னு கேட்டாங்க. அதுவும் சரிதான். ஆனா அத்வைத விசாரணையோ காலம் பிடிக்கற சமாசாரம். என்ன செய்யலாம்?

ராஜா யோசிச்சு துறவிகிட்டே போய் உங்ககிட்ட பாடம் கேட்ட ஆசையா இருந்தாலும் நடைமுறைச் சிக்கல் இருக்கு. நீங்க பேசாம என் கூட அரண்மனைக்கு வந்துடுங்களேன் ன்னு கேட்டான். துறவி “அப்பா நீ ஒண்ணு ராஜ்யத்தைப்பத்திக் கவலைப்படணும். இல்லை அத்வைத விசாரணையை முழு நேரமா எடுத்துக்கணும். ரெண்டும் இல்லாம அவஸ்தைப் படாதே. என்னை மாதிரி துறவிங்களுக்கு அரண்மனை வாழ்க்கை எல்லாம் சரிப்படாது” ன்னு சொன்னார். ராஜாவோ அதைக் கேட்கலை. திருப்பித் திருப்பி வற்புறுத்தினான்.

சரின்னு துறவியும் ராஜாவோட அரண்மனைக்கு வந்துட்டார்.

ராஜா வேலைக்காரர்களைக் கூப்பிட்டு இவரை நல்லா கவனிச்சுக்குங்கன்னு உத்திரவு போட்டு விட்டு அரசியலைக் கவனிக்கப் போயிட்டான்.

ராஜா அரசியல் சிக்கல்களில மாட்டிக்கொண்டு இந்தப்பக்கம் கவனம் செலுத்த நேரமே இல்லாமல் போனான்.

இந்தக் கூத்து ஜனங்கள் மத்தில விமர்சனம் இல்லாம இருக்குமா? ராஜா ஒரு சாமியாரை அழைச்சுக்கொண்டு வந்து அரண்மனையில வெச்சு இருக்கான். அவரோ வேளா வேளைக்கு நல்லா விருந்து சாப்பிட்டு ஆட்டம் பாட்டம்ன்னு பொழுதைக் கழிக்கிறார் ன்னு பேச்சு அடிபட்டது. இது மெதுவா ராஜா காதுக்கும் எட்டினது. ராஜா ஷாக் ஆயிட்டான். விசாரிச்சா அது உண்மைதான்னு தெரிஞ்சது. நேரா போய்ப் பார்த்து உறுதி செய்துகிட்டான்.

தானேதான் இவரை இங்கே கொண்டு வந்து வெச்சது. என்ன செய்யறது?

ஒரு வாரம் பத்து நாள் போச்சு. அதே ரொடீன்தான் தொடர்ந்தது.

ராஜா முகம் உம்முன்னு இருக்கிறதைப் பார்த்துத் துறவியும் என்ன விஷயம்ன்னு ஊகிச்சுக் கொண்டார்.
ஒரு நாள் மாலை ராஜாகிட்ட நாம் தேர்ல ஏறி ஊரைச் சுத்திப் பார்க்கலாமான்னு கேட்டார். போகலாமே ன்னு ராஜா சொன்னார்.
ஊருக்கு வெளியே தேரை விடச்சொன்னார் துறவி. காட்டுக்குப் போகிற பாதை வந்தது. துறவி தேரை நிறுத்தச்சொல்லிக் கீழே இறங்கினார். ராஜாவைப் பார்த்துச் சொன்னார். “இதோ பார்! நான் அரண்மனைக்குத் திரும்பலை; காட்டுக்குத் திரும்பிப்போறேன். உனக்கு வேதாந்தத்துல அவ்வளவு ஆர்வம் இருந்தா என்னோட வா. இல்லையானா திரும்பி போ!”

ராஜா சொன்னான் “சாமி, என்னை நம்பி இவ்வளவு ஜனங்க இருக்காங்களே! அவங்களை விட்டுவிட்டு எப்படி வருவேன்?”
துறவி சொன்னார். “இந்த ஜனங்களை எல்லாம் நீ காப்பாத்தறதாத்தானே நினைக்கிறாய்? உனக்கு வேதாந்த விசாரணை செய்ய நேரம் வரலை. திரும்பிப்போய் ராஜ்யத்தைக் கவனி.”
திரும்பிக்கூடப் பார்க்காமக் காட்டை நோக்கிக் கிளம்பிட்டார் துறவி.

இப்படி ராஜ போகத்தை பட்டுன்னு உதற முடிஞ்சது ஏன்னா வைராக்யத்தால்.

பக்குவம் வந்தவங்களால இப்படித் தாமரை இலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் இருக்க முடியும். இதுவே உண்மையான பற்றின்மை.
இது வேணும் அது வேணும்ன்னு அலையாம, தேடிப்போகாம, தானாக என்ன கிடைக்குதோ அதை வைத்துக்கொண்டு இயல்பாக வாழ்க்கை நடத்துவதே இந்தப் பற்றின்மையின் அடையாளம்.

எது கிடைக்குதோ அதை உள்ளபடி பார்க்கணும். இது நமக்கு எந்த விதத்தில பிரயோஜனம் ன்னு யோசிக்கணும். பிரயோஜனம் இல்லைன்னா அதை அப்படியே விட்டுடணும். சும்மா பார்க்கிறதெல்லாம் கைவசப்படணும், கைவசப்படறதெல்லாம் அனுபவிக்கணும்ன்னு ஒண்ணுமில்லை.
இப்படி இருக்கிறவங்க தான் என்ன செய்யணுமோ அதை ஒழுங்கா செய்து கொண்டு போவாங்க. தனக்கு என்ன கிடைக்கிறதுன்னு ஒரு கவலையும் பட மாட்டாங்க.

http://anmikam4dumbme.blogspot.in/2012/02/blog-post.html

# 22

## யக்ஷவித்தம்

ஒரு ஊரிலே ஒரு ராஜா. அவனுக்கு ஒரு நாவிதன். நாவிதனுக்கு ராஜாவோட சம்பந்தம் இருந்ததால நிறைய பேர் அவன்கிட்ட முடி வெட்டிக்க, ஷேவிங் செய்து கொள்ள வருவாங்க. இவனும் பிகு பண்ணிப்பான். நேரம் இல்லை அப்புறம் வாம்ப்பான். அவங்க பண்ணிவிடுப்பான்னு தாஜா பண்ணுவாங்க. நிறைய காசு கொடுப்பாங்க. எனக்கெள இவ்வளோ வேணாம். நான் ராஜாகிட்டே வேலை செய்யறேனாக்கும் என்பான். அவங்க வற்புறுத்தி கொடுப்பாங்க. நாவிதனும் சந்தோஷமா இருந்தான்.

ஒரு நாள் காட்டு வழியே போகும் போது அவனெதிரே ஒரு யக்ஷன் வந்தான். உனக்கு நிறைய காசு வேணுமா? நான் புதையல் இருக்கற இடத்தை காட்டறேன்னு சொன்னான். நாவிதனுக்கு அதிசயமா போச்சு! யார் வேண்டாம்ன்னு சொல்வாங்க? காட்டு காட்டு ன்னான். இதோ இந்த மரத்தடியில தோண்டு. ஏழு ஜாடி நிறைய தங்கம் கிடைக்கும்ன்னு சொல்லிட்டு யக்ஷன் போய்ட்டான். நாவிதனும் தோண்டிப்பார்க்க அங்கே யக்ஷன் சொன்னபடியே ஏழு ஜாடிகள் கிடைச்சது.

சந்தோஷமா வீட்டுக்கு எடுத்துப்போய் எல்லாத்தையும் திறந்து பார்த்தான். ஒரு ஜாடி தவிர எல்லாத்திலேயும் தங்க காசுகள் நிரம்பி இருந்தது. ஒண்ணுத்துல மட்டும் முக்கால் ஜாடிதான் காசுகள் இருந்தது. நாவிதனுக்கு ஒரே வருத்தம். ஏன் இப்படி இதில மட்டும் குறைஞ்சு இருக்கு? அதை நிரப்பனும்ன்னு ஒரு வெறி வந்தது. வீட்டில் இருந்த பணத்தை எல்லாம் கொண்டுப்போய் தங்க காசு வாங்கி வந்து அதில போட்டான். நிரம்பலை. பெண்டாட்டி நகை எல்லாம் பிடுங்கி காசா மாத்தி நிரப்பப்பார்த்தான். அளவு கொஞ்சம் அதிகமாச்சே தவிர நிரம்பலை. அது ஏதோ மாய ஜாடி போல இருந்தது. எவ்வளோ காசு போட்டாலும் நிரம்பலை. நாவிதனுக்கு அன்னிலிருந்து அதுவே ஒரு குறிக்கோளா போச்சு. பைத்தியம் பிடித்தவன் போல இதை எப்படி எல்லாம் சம்பாதிச்சு நிரப்பலாம் என்கிறதே சிந்தனையா போச்சு. முன்னே வருகிற வாடிக்கையாளர்களை அலட்சியம் செய்தவன் இப்ப வலுவில போய் உனக்கு நான் முடி வெட்டி விடுகிறேனே என்று வேலையை தேடிப் பிடிக்க ஆரம்பித்துவிட்டான். எவ்வளோ காசு போட்டும் அது நிரம்பறதா இல்லை. ஆனா நிரம்பவே நிரம்பாதுன்னு ஒரு தோற்றத்தையும் அது தரலை. அதனால் நாவிதன் என்னைக்கோ ஒரு நாள் இது நிரம்பும் என்றே நம்பினான்.

இது வரை சந்தோஷமா இருந்த ஆசாமி கவலையால பீடிக்கப்பட்டு உடம்பு கெட்டுப்போனான். ராஜாகிட்டே சம்பள உயர்வு கேட்டான். ஆச்சரியப்பட்டாலும் சரின்னு ராஜாவும் கொடுத்தார். அன்னிலேந்து அவனை கவனிக்க ஆரம்பிச்சார். எப்பவுமே வருத்தத்தோட இருக்கிறதை கவனிச்சார். ஒரு நாள் திடுதிப்புனு “ஏம்பா? காட்டிலே யக்ஷனை பாத்தியா? அவன் உனக்கு புதையல் தரேன்னு சொன்னானா” ன்னு கேட்டார். நாவிதனுக்கு தூக்கி வாரி போட்டுது! ஆமாம் ராஜா, உங்களுக்கு எப்படி தெரியும் ன்னு கேட்டான். அதான் திடீர்ன்னு காசுக்குப்பறக்கறயே! முன்னே நீ இப்படி

இல்லை. அதனால் ஊகிச்சேன் ன்னான் ராஜா.

அவனை உங்களுக்கு தெரியுமா ராஜா?

தெரியும்ப்பா. எனக்கும் அவன் புதையலை காட்டறேன்னான். நான்தான் வேண்டாம்னுட்டேன்.

ஏன் ராஜா?

அதைப்பத்தி எனக்குத்தெரியும். அது ஒரு மாய ஜாடி. அதில நீ எவ்வளவுதான் காசு போட்டாலும் நிரம்பவே நிரம்பாது ன்னான் ராஜா.

இப்ப நாவிதனோட அதிர்ஷ்டம் வேலை செஞ்சது. ராஜா சொன்னது சரின்னு மனசுக்கு பட்டது.

நான் என்ன செய்யட்டும்?

அந்த ஜாடிகளை திருப்பி எடுத்துப்போ. காட்டில் யக்ஷனை பாத்தா நீயே வெச்சுக்கோ ன்னு கொடுத்துட்டு வந்துடு.

அதே போல காட்டுக்குப்போய் யக்ஷனை பார்த்து ஜாடிகளை திருப்பி கொடுத்துவிட்டு சந்தோஷமா இருந்தான் நாவிதன்.

யக்ஷர்களுக்கு ராஜா குபேரன். ஜனங்களுக்கு காசு ஆசை இருக்கற வரை குபேரனும் நல்லா இருப்பானாம். அதனால மக்களை காசு காசுன்னு டெம்ப்ட் பண்ணுவான் என்கிறாங்க பெரியவங்க.

ரொம்ப ஆசைப்படாம அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு நிம்மதியா வாழலாம். ஆனா அப்படி ஒத்தரை பார்க்கிறது அரிதே. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் ன்னு ஔவை பாட்டி சொன்னாலும் நாம அதுக்கு மேலேயே சாப்பிடுகிறோம். பலரும் பசிக்கு சாப்பிடுகிறாப்போல தோணலை. இவ்வளோ ன்னு சாப்பிட்டு பழக்கமாயிடுத்து. அதனால் முன் போல வேலை செய்கிறோமோ இல்லையோ அதே அளவு சாப்பிடுகிறோம். பசி இருக்கோ இல்லையோ அதே நேரத்துக்கு தினசரி சாப்பிடுகிறோம். முன்னே இருந்த இளம்வயசா இப்ப இல்லை; அப்போதையா ஆட்டம் பாட்டம் இப்ப இல்லை, இருந்தாலும் அதே அளவு சாப்பிடுகிறோம். இது ஒரு பழக்கமா போயிடுத்து.

கிடைச்சதை கொண்டு திருப்தியா இருக்கிறது ஒரு நல்ல விஷயம்.

http://anmikam4dumbme.blogspot.in/2012/01/4.html

# 23

## கோபம்

கோபம் வராம இருக்கிறதும் பிரச்சினைல முடிஞ்சுடலாம் ன்னு சிலர் கவலைப்படுறாங்க. கோபப்படாம சாதுவா இருக்கறவங்களை மத்தவங்க தூக்கிப்போட்டு மிதிச்சுடுவாங்கன்னு ஒரு பயம்!

தயானந்த ஸ்வாமிகளை ஒரு அன்னிய நாட்டவர் கேட்டாராம். "ஸ்வாமி சாதுன்னா என்ன?"
இவரும் விளக்கம் சொன்னார்.
"அப்ப சாதுக்களுக்கு கோபமே வராதா?"
"ஆமாம், வரக்கூடாது."
"நீங்க ஒரு சாதுவா? அப்ப நான் உங்களை அடிக்கலாமா?"
"அடித்தால் கோபம் வரும் என்று இல்லை. ஆனால் உங்களுக்கு தகுந்த பாடம் புகட்டுவேன்!"
இதான் அத்து மீறுகிறது என்கிறது!

ஒரு சன்யாஸி ஒரு நாள் ஒரு கிராமத்தில் தங்கினார். மூன்று நாட்கள் தங்கி மக்களுக்கு உபதேசங்கள் செய்தார். நாலாம் நாள் சன்யாஸ தர்மப்படி கிராமத்தை விட்டு கிளம்பிட்டார். கிளம்பும்போது சாமி எந்த ஊருக்கு அடுத்து போறீங்க? ன்னு கேட்டாங்க. இவரும் சொன்னார். சாமி அதுக்கு காட்டு வழி குறுக்கு வழியானாலும் அந்த பக்கமா போகாதீங்க! அங்க வழில ஒரு பாம்பு இருக்கு. அது போற வரவங்களை எல்லாம் கடிக்குது. ஆடு மாடு மேய்க்க போற பசங்கள் எல்லாரும் கஷ்டப்படுறாங்க ன்னு சொன்னாங்க. அடப்பாவமே! அப்படியா? சரின்னு சொல்லிட்டு சன்யாஸி காட்டு வழியாவே போனார். வழியில பாம்பையும் பார்த்தார். நீ ஏன் இப்படி எல்லாரையும் கடிச்சு துன்புறுத்தறே? உன் இரையை நீ தேடிக்கோ. இரை அல்லாததை சும்மா கடிக்கக்கூடாது ன்னு சொன்னார். சரி சாமி அப்படியே ஆகட்டும் ன்னு அதுவும் சொல்லித்து.
கொஞ்ச நாள் கழிச்சு ஆடு மாடு மேக்கிற பசங்க அங்கே போனப்ப பாம்பு தொல்லை காணலையேன்னு ஆச்சரியப்பட்டாங்க. அதோட நிக்கலை. ரெண்டு நாள் கழிச்சு அது எங்கேன்னு தேடி கண்டு பிடிச்சாங்க. கடிக்க மாட்டேன்னு சத்தியம் செஞ்சு கொடுத்த பாம்பு இப்ப ஓடி ஒளிய திண்டாட வேண்டி இருந்தது! ஓடர நாயை கண்டா என்ற ரீதியில பசங்க துரத்தி துரத்தி கல்லால அடிச்சு ஒரே கலாட்டா. இதனால பகல்ல பாம்பு வெளியே வரவே வராம ஒளிஞ்சு இரை தேடக்கூட முடியாம கஷ்டப்பட்டது.
சில வாரங்கள் கழிச்சு அதே சன்னியாசி திரும்பும் வழியில அதே காட்டு வழியா வந்தார். பாம்பு இருக்கிற இடம் வந்ததும் அதை நினைவு கொண்டு நண்பனே எங்கே இருக்கிறாய் ன்னு கூப்பிட்டார். பாம்பும் சன்னியாசி குரலை கேட்டு மறைவிடத்துலேந்து வெளியே வந்து வணங்கியது.

"என்னப்பா இப்படி ஏதோ குத்துயிரும் குலையுயிருமா இருக்கே? இளைச்சு போயிட்டயே!" ன்னு கரிசனத்தோட கேட்டார். பாம்பும் கடிக்கறதை விட்ட பிறகு மக்கள்


தன்னை தேடித்தேடி அடிக்கறதை சொல்லித்து. சன்னியாசி சொன்னார், “பாம்பே! நீ நான் சொன்னதை கொஞ்சம் தவறா புரிஞ்சு கொண்டே! நான் கடிக்காதேன்னுதானே சொன்னேன்? சீறாதேன்னு சொன்னேனா?”

அப்புறம் பாம்பு சீற ஆரம்பிச்சது. ஜனங்களும் பழைய படி அதுக்கு பயந்து அதை சீண்டறதை விட்டுட்டாங்க.

http://anmikam4dumbme.blogspot.in/2011/12/4.html

**1**

# திருமூர்த்தி வாசுதேவன்



இவர் தமிழ் பற்று கொண்ட மருத்துவர்.

இவரது சில தொண்டுகள்:

- GNOME தமிழாக்கம்
- மின்னூல் ஆக்கம்
- http://spoken-tutorial.org தமிழாக்கம்
- ஸ்வாமிநாதர் வேதபாடசாலை

**2**

# **Free Tamil Ebooks -** எங்களைப் பற்றி

மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

எனவே ஒரு தமிழ் வாசகர் மேற்கூறிய “மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகளை” வாங்கும்போது, அவரால் எந்த ஒரு தமிழ் சமீபத்திய புத்தகத்தையும் இலவசமாகப் பெற முடியாது.

சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா**?**

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் "All Rights Reserved" எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் "All Rights Reserved" என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை "Creative Commons" உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்"-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

**FreeTamilEbooks.com**

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா**?**

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை
எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அல்லது www.pressbooks.com தளத்தையும் பயன்படுத்தலாம்.

அவ்வளவுதான்!

மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:

1. ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை “Creative Commons” உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்
2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்
3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@gmail.comஎனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்**?**

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்**?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா**?**

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. www.vinavu.com

2. http://jayabarathan.wordpress.com/

3. kaniyam.com

4. blog.ravidreams.net

5. http://mmauran.net/blog

6. http://gnutamil.blogspot.in/

7. http://tech.neechalkaran.com/p/copyleft.html

8. http://tamilcpu.blogspot.in

எவ்வாறு ஓர் எழுத்தாளரிடம் **Creative Commons** உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது**?**

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் http://www.FreeTamilEbooks.com எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் odt, pdf, ebub, azw போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை "Creative Commons" உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : **freetamilebooksteam@gmail.com**
FB : https://www.facebook.com/FreeTamilEbooks

G +: https://plus.google.com/communities/108817760492177970948

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் "Creative Commons License"-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலை**freetamilebooksteam@gmail.com** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது**?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்**?**

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும்**.** அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்**.**

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம்**.** அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி**-I** பகுதி**-II** என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்**.**

தவிர்க்க வேண்டியவைகள் யாவை**?**

இனம்**,** பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்**.**

**www.freetamilebooks.com** எனும் தளம் தயார் நிலையில் உள்ளதா**?**

தற்சமயம் இல்லை**.** கூடிய விரைவில் தயார்நிலைக்கு வந்துவிடும்**.**

எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி**?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்**.**

- **email : freetamilebooksteam@gmail.com**
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks
- Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948

இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்**?**

- **Shrinivasan tshrinivasan@gmail.com**

- **Alagunambi Welkin** alagunambiwelkin@fsftn.org
- **Arun** arun@fsftn.org
- இரவி

### Supported by

- Free Software Foundation TamilNadu, www.fsftn.org
- Yavarukkum Software Foundation http://www.yavarkkum.org/